# 72ஆம் ஆண்டு ஸ்கந்த ஷஷ்டிப் பெருவிழா அழைப்பிதழ்

**22-10-2025 புதன் முதல் 28-10-2025 செவ்வாய் முடிய**



விழா நடைபெறும் இடம்:

ஸ்ரீ ஸத்யாநந்தா யோகா மையம்
No. 4, T. P. கோயில் 2ஆவது சந்து,
ஐஸ் ஹவுஸ், திருவல்லிக்கேணி,
சென்னை - 600 005.

## சிறப்பு நிகழ்ச்சிகள்

- ஆறுமுக லக்ஷார்ச்சனை / த்ரிசதி
- ருத்ர பாராயணம்
- திருப்புகழ், பக்திப்பாடல்கள் இன்னிசை
- ஸ்ரீ அருணகிரிநாதர் விழா
- ஷஷ்டி விழா மலர் வெளியீடு
- ஸ்கந்த ஷஷ்டிப் பெருவிழா
- தேவசேனா வள்ளி கல்யாணம்

ஆடும் பரி வேல் அணி சேவல் எனப்
பாடும் பணியே பணியாய் அருள்வாய்

72ஆவது ஆண்டு
ஷஷ்டிப் பெருவிழா

பாத பங்கய(ம்) (உ)ற்றிட (உ)ட் கொண்(டு)
ஓது கின்ற திருப்புகழ் நித்தம்
பாடு(ம்) (அ)ன்பு (அ)து செய்பதியி(ல்) தந்தவன் நீயே

## முருகன் திருவருட் சங்கம் (Regd)

101 /50, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600005.
தொலை பேசி : 044-2854 4713

# 72ஆவது ஆண்டு ஸ்கந்த ஷஷ்டிப் பெருவிழா




**22.10.2025 புதன்கிழமை முதல்**
**28.10.2025 செவ்வாய்க்கிழமை முடிய**

விழா நடைபெறும் இடம்

**ஸத்யாநந்தா யோகா மையம்**
4, T.P. கோயில் 2ஆவது சந்து
ஐஸ்ஹவுஸ், திருவல்லிக்கேணி
சென்னை 600 005
கைப்பேசி 98417 38069

**முருகன் திருவருட் சங்கம் (**Regd.,)
Society Regn. No. 137/2024
101/50, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005
☎ 044 2854 4713

(எப்)பொழுதும் வந்திக்கைக்(கு) (அ)ற்ற ஏனை(ப்) பின்
பிழை(உ)டன்பட்டுப் பத்தர்(உ)ள் வைக்கும்
பொறையை(எ)ன் செப்பிச் செப்புவ(து)(ஒ)ப்பு(ஒ)ன்று (உ)ளதோதான்

**(கனிதரும் - காஞ்சித் திருப்புகழ்)**

---

உ

முருகா சரணம்

# முருகன் திருவருட் சங்கம் (Regd.,)

Society Regn. No. 137/2024

101/50, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005

ஸ்தாபிதம்: 1954 ☎ 044-28544713

## நிகழ்ச்சி நிரல்

ஆனைமுகவற்கு இளைய ஐயனின் திருவருளினால் சங்கத்தின் 72ஆவது ஆண்டு ஸ்கந்த ஷஷ்டிப் பெருவிழா 20.10.2025 புதன்கிழமை முதல் 28.10.2025 செவ்வாய்க்கிழமை முடிய ஏழு தினங்கள் நிகழ்ச்சி நிரலில் குறிப்பிட்ட வண்ணம் திருவல்லிக்கேணி ஸத்யா நந்தா யோகா மையம் ஹாலில் நடைபெற உள்ளது.

அடியார்கள் யாவரும் நமது சங்கத்தின் சார்பில் நடைபெறும் இந்த 72ஆவது ஆண்டு ஸ்கந்த ஷஷ்டிப் பெருவிழா நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வதுடன் தங்களால் இயன்ற அளவு அரிசி, பருப்பு, மற்றும் பொருளுதவிகளை அளித்து, வள்ளி படர்சாரல் வள்ளிமலை மேவு வள்ளி மணவாளப் பெருமானின் திருவருளால் வாழ்க்கையில் இஹபர சௌபாக்கியத்துடனும், சகல செல்வ யோக மிக்க பெருவாழ்வுடனும் வாழப் பிரார்த்திக்கிறேன்.

இங்ஙனம்

**முருகன் திருவருட் சங்கத்தார்**

---

எப்பொழுதும் வணங்குதலே இல்லாத அடியேனை இந்தக் குறைகள் உடையவன் என்று அறிந்த பின்னும், என்னுடைய குற்றங்களைப் பொறுத்து உடன்பட்டு அடியேனை உமது அடியார்களின் திருக்கூட்டத்துடன் ஒருவனாக வைத்த உமது கருணையை என்ன என்று சொல்லிப் புகழ்வது? அக்கருணைக்கு நிகர் ஒன்று உள்ளதா? இல்லை.

(மற்)றவரு(ம்) நிந்திக்கத் தக்க பிறப்பு இங்கு
அல(ம்) மலஞ் செச்சைச் சித்ர மணித் தண்(கூட)
அரவிந்தத்தி(ல்) புக்கு அடைதற்கு என்று அருள்வாயே
**(தசைதுறும் - காஞ்சித் திருப்புகழ்)**

உ
முருகா சரணம்

# முருகன் திருவருட் சங்கம் (Regd.,)

Society Regn. No. 137/2024
101/50, பெரிய தெரு, திருவல்லிக்கேணி, சென்னை 600 005

ஸ்தாபிதம்: 1954 ☎ 044-28544713

## நிகழ்ச்சி நிரல்

22.10.2025 புதன்கிழமை முதல் 27.10.2025 திங்கட்கிழமை முடிய ஆறு தினங்களும் காலை 7.30 மணி முதல் பிற்பகல் 12.30 மணி வரை ஸ்ரீவள்ளி தேவசேனா ஸமேத ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய சுவாமிக்கு அபிஷேக ஆராதனைகளுடன், ஈசானம், தத்புருஷம், அகோரம், வாமதேவம், ஸத்யோஜாதம், அதோமுகம் ஆகிய ஆறுமுகங்களுக்குரிய லக்ஷார்ச்சனையும், பஜனை வழிபாடும், மாலையில் திருப்புகழ் மற்றும் பத்திப் பாடல்கள் இன்னிசை நிகழ்ச்சிகளும் நடைபெற உள்ளன. 26.10.2025 ஞாயிற்றுக்கிழமை காலை சூர்ய நமஸ்காரமும், அதனைத் தொடர்ந்து காலை 7.30 மணி முதல் அகண்ட திருப்புகழ் பஜனை வழிபாடும் 27.10.2025 திங்கட்கிழமை "மஹா ஸ்கந்த ஷஷ்டி" அன்று காலை கணபதி ஹோமத்துடன், ஏகாதச ருத்ர ஜபமும், குமார போஜனமும் அன்னதானமும் மற்றும் 28.10.25 செவ்வாய்க்கிழமை அன்று காலை "ஸ்ரீ தேவசேனா வள்ளி கல்யாண வைபவமும் நடைபெற உள்ளது.

இங்ஙனம்
**முருகன் திருவருட் சங்கத்தார்**

---

பிறர் பார்த்த உடன் எச்சிலைத் துப்பி நிந்திக்கத்தக்கதான இந்த பிறப்பு இங்கு போதும்; போதும்; அழகிய இரத்தின மணியினால் ஆகிய தண்டை அணிந்த தாமரை போன்ற உமது பாதத்தைப் பற்றிச் சேர்வதற்கு என்று அருள் புரிவீர்?

மேதினிக்கு(உ)ள் (அ)பத்தன் எனப் பல
பாடுபட்டு புழுக்கொள் மலக் குகை
வீடு கட்டி (இ)ருக்கும் (எ)னக்கு(ம்) நின் அருள் தாராய்
**(ஆலம்-திருவானைக்காத் திருப்புகழ்)**

## 22.10.2025 புதன்கிழமை

| | |
|---|---|
| காலை 07.30 மணி முதல்<br>பிற்பகல் 12.30 மணி வரை | **ஸ்ரீ ருத்ர பாராயணத்துடன் முருகப் பெருமானுக்கு அபிஷேக ஆராதனை தொடர்ந்து ஈசானமுக (மேல்நோக்குதல்) ஸஹஸ்ரநாம அர்ச்சனை** |
| பிற்பகல் 04.30 மணி முதல்<br>மாலை 06.00 மணி வரை | **வேத பாராயணம்** |
| மாலை 06.05 மணி முதல்<br>இரவு 08.00 மணி வரை | **திருப்புகழ் மற்றும் பத்திப் பாடல்கள் இன்னிசை**<br>**ஸ்ரீமதி மதுவந்தி ஆத்ரேயா** குழுவினர்<br>சென்னை 600 035 |

ஃஃஃஃஃ

## 23.10.2025 வியாழக்கிழமை

| | |
|---|---|
| காலை 07.30 மணி முதல்<br>பிற்பகல் 12.30 மணி வரை | **ஸ்ரீ ருத்ர பாராயணத்துடன் முருகப் பெருமானுக்கு அபிஷேக ஆராதனை தொடர்ந்து பூர்வ தத்புருஷ (கிழக்கு நோக்குதல்) ஸஹஸ்ரநாம அர்ச்சனை** |
| பிற்பகல் 04.30 மணி முதல்<br>மாலை 06.00 மணி வரை | **வேத பாராயணம்** |

பூமியில் பொய்யன் என்று பேர் பெற்று, பல துன்பங்களை அடைந்து, புழுக்கள் நிரம்பிய மலக்குகையாகிய இந்த உடம்பாகிய வீட்டை எடுத்திருக்கும் அடியேனுக்கும் உமது திருவருளைத் தந்தருள்வீராக.

கமடமதாய் வம்பு மால் கொளுந்திய
திமிரரொடே பந்தமாய் வருந்திய
துரி(சு) அற ஆனந்த வீடு கண்டிட அருள்வாயே
**(குருதிபுலால்-திருவானைக்கா திருப்புகழ்)**

| | |
|---|---|
| மாலை 06.05 மணி முதல்<br>இரவு 08.00 மணி வரை | **திருப்புகழ் மற்றும் பத்திப் பாடல்கள் இன்னிசை**<br>**ஸ்ரீமதி ப்ரும்ம வித்யா** குழுவினர்<br>சென்னை 600 011 |

ΩΩΩΩΩ

## 24.10.2025 வெள்ளிக்கிழமை

| | |
|---|---|
| காலை 07.30 மணி முதல்<br>பிற்பகல்12.30 மணி வரை | **ஸ்ரீ ருத்ர பாராயணத்துடன் முருகப் பெருமானுக்கு அபிஷேக ஆராதனை தொடர்ந்து தக்ஷிண (தெற்கு நோக்குதல்) அகோரமுக ஸஹஸ்ரநாம அர்ச்சனை** |
| பிற்பகல் 04.30 மணி முதல்<br>மாலை 06.00 மணி வரை | **வேத பாராயணம்** |
| மாலை 06.05 மணி முதல்<br>இரவு 08.00 மணி வரை | **திருப்புகழ் மற்றும் பத்திப் பாடல்கள் இன்னிசை**<br>**ஸ்ரீ R.S. இராஜகோபாலன்** குழுவினர்<br>இராஜா அண்ணாமலைபுரம்<br>சென்னை 600 028 |

ΩΩΩΩΩ

---

அறிவிலியாய், பயனில்லாததும், ஆசைகளைத் தூண்டுவதுமாகிய கொடிய ஆணவ இருள் கொண்டவர்களுடன் கூடி வருத்தம் அடைந்த குற்றமானது என்னை விட்டு விலகவும், பேரின்ப வீட்டை அடியேன் காணும்படியாக அருள்புரிவீராக.

முழுது(உ)ணர (உ)டையமுது மாத வத்து(உ)யர்ந்த
பழுதில் மறை பயிலுவ என (ஆ)தரித்து நின்று
முநிவர் சுரர் தொழுது உருகி பாத பத்மம் (எ)ன்று(ம்) மறவேனே

**(இருளாக-திருவண்ணாமலைத்திருப்புகழ்)**

---

## 25.10.2025 சனிக்கிழமை

| | |
|---|---|
| காலை 07.30 மணி முதல்<br>பிற்பகல்12.30 மணி வரை | **ஸ்ரீ ருத்ர பாராயணத்துடன் முருகப் பெருமானுக்கு அபிஷேக ஆராதனை தொடர்ந்து உத்திர வாமதேவமுக (வடக்கு நோக்குதல்) ஸஹஸ்ரநாம அர்ச்சனை** |
| பிற்பகல் 04.30 மணி முதல்<br>மாலை 06.00 மணி வரை | **வேத பாராயணம்** |
| மாலை 06.05 மணி முதல்<br>இரவு 08.00 மணி வரை | **திருப்புகழ் மற்றும் பத்திப் பாடல்கள் இன்னிசை**<br>வில்லிவாக்கம் **ஸ்ரீ S. ரகுராமன்**<br>மற்றும் சிஷ்யர்கள் பஞ்ச வயலின் இசை<br>குமாரி **ஸ்ருஷ்டி K.R.**<br>குமாரி **ப்ரிதிவ்யா சிவராமன்**<br>குமாரி **ஸுதீக்ஷா K.**<br>குமாரி **மித்ரா விஜய்**<br>நெய்வேலி **ராம்குமார்,** மிருதங்கம்<br>**ஸ்ரீ K.R. வெங்கட ஸுப்ரஹ்மணியன்**<br>(டிஜிட்ல் பேடு) Digital Pad. |

---

எல்லாம் உணரும் படியாகவும், அடைந்துள்ள முதிர்ந்த மகா தவ நிலையிலும், உயர்ந்ததும், குற்றம் இல்லாததுமான வேதத்திலும், நெருங்கி விளங்குவன என்று விரும்பி தேவர்களும், முநிவர்களும் வணங்கி உருகுகின்ற உமது பாத தாமரைகளை அடியேன் என்றும் மறக்க மாட்டேன்.

அடியவர் அச்சத்(து) (அ)ழுங் கிடும் துயர்
தனை (ஒ)ழிவித்துப் ப்ரியங்கள் தந்திடும்
அருணகிரிக்கு உள் சிறந்(து) அமர்ந்து அருள் பெருமாளே
**(சிலைநுதல்-திருவண்ணாமலைத் திருப்புகழ்)**

## 26.10.2025 ஞாயிற்றுக்கிழமை

| | |
|---|---|
| காலை 06.00 மணி | **சூர்ய நமஸ்காரம்** |
| காலை 07.30 மணி முதல்<br>பிற்பகல்12.30 மணி வரை | **ஸ்ரீ ருத்ர பாராயணத்துடன் முருகப் பெருமானுக்கு அபிஷேக ஆராதனை தொடர்ந்து ஸத்யோஜாத முக (மேற்கு நோக்குதல்) ஸஹஸ்ரநாம அர்ச்சனை** |
| காலை 07.30 மணி முதல்<br>பிற்பகல் 1.30 மணி வரை | **ஸ்ரீ அருணகிரிநாதர் விழா**<br>**திருப்புகழ், அநுபூதி, அலங்காரம் மற்றும் வகுப்புகளிலிருந்து சில பாடல்கள்**<br>நிகழ்த்துபவர்<br>**முருகன் திருவருட் சங்கத்தினர்**<br>திருவல்லிக்கேணி, சென்னை 600 005 |
| மாலை 04.30 மணி முதல்<br>மாலை 06.00 மணி வரை | **வேத பாராயணம்** |
| மாலை 06.00 மணி முதல்<br>இரவு 08.00 மணி வரை | **ஷஷ்டி விழா மலர் வெளியீடு**<br>**கந்தரநுபூதி மற்றும்**<br>**ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய புஜங்கம்** |
| இறை வணக்கம் | **ஸ்ரீமதி சிவப்ரியா** |
| வரவேற்புரை &<br>துவக்க உரை | **ஸ்ரீ S. கணபதி ஸுப்ரஹ்மண்யன்**<br>சென்னை 600 005 |

---

அடியார்கள் பயத்தினால் துன்புற்று ஒடுங்கும் வருத்தத்தை நீக்கி, அந்த அடியார்கள் விரும்பிய அனைத்தையும் வழங்கி அருள்பவரே! திருவண்ணாமலையில் சிறப்பாக எழுந்தருளியிருக்கும் பெருமையில் சிறந்தவரே!

குறித்தே முத்திக்கு மாறா (இ)ன்பத்
தடத்தே பற்றிச் சகமாயம் பொய்க்
குல(ம்) கால் வற்றச் சிவஞானம் பொ(ன்) கழல்தாராய்

**(சரக்கே-காளஹஸ்தித் திருப்புகழ்)**

| | |
|---|---|
| தலைமை உரை மற்றும் மலரினை வெளியிடுபவர் | **ஸ்ரீ S. கணேஷ் சர்மா** <br> சென்னை 600 004 |
| மலரினைப் பெறுநர்கள் | **ஸ்ரீ வைபவ் சங்கர் B.** <br> சென்னை 600 018 |
| | **ஸ்ரீ பரமேஷ் வைத்யா G.** <br> சென்னை 600 018 |
| | **ஸ்ரீ ரகுராம ஸர்மா G.** <br> சென்னை 600 005 |
| | **ஸ்ரீ மயூர் H.** <br> சென்னை 600 020 |
| | **ஸ்ரீ ஸ்ரேயஸ் ஸ்வாமிநாதன் S.** <br> சென்னை 600 004 |
| | **ஸ்ரீ ஸ்வாமிநாதன் S.** <br> சென்னை 600 004 |
| | **ஸ்ரீ சந்த்ரமௌளீஸ்வர சிவம் N.** <br> சென்னை 600 028 |
| | **ஸ்ரீ கற்பக விநாயகம்** <br> சென்னை 600 028 |
| நன்றியுரை | **ஸ்ரீ V. P. நாராயணன்** <br> சென்னை 600 004 |

குறிக்கொண்டு முத்திக்கு மாறுபடாத இன்ப வழியைக் கைப்பற்றி, உலகமாயை, பொய், குலம், குடி முதலிய பற்றுக்கள் வற்றிப்போக, சிவ ஞானமாகிய உமது அழகிய திருவடியை தந்தருள்வீராக!

சங்கடன் (ஆ)கித் தளர்ந்து நோய் வினை
வந்து உடல் மூடக் கலங்கிடா மதி
தந்(து) (அ)டியேனைப் புரந்திடாய் (உ)னது அருளாலே
(பங்கய-காளஹஸ்தித் திருப்புகழ்)

## 27.10.2025 திங்கட்கிழமை
## மஹா ஸ்கந்த ஷஷ்டி விழா

| | |
|---|---|
| காலை 06.00 மணி | **கணபதிஹோமம்** |
| காலை 07.30 மணி முதல்<br>பிற்பகல் 01.00 மணி வரை | **ஏகாதச ருத்ர ஜபத்துடன் முருகப் பெருமானுக்கு அபிஷேக ஆராதனை தொடர்ந்து, அதோமுக (கீழ் நோக்குதல்) ஸஹஸ்ரநாம அர்ச்சனை** |
| காலை 09.00 மணி முதல்<br>முற்பகல் 11.30 மணி வரை | **திருப்புகழ், பத்திப் பாடல்கள் இன்னிசை ஸ்ரீமதி கோமதி ஸ்ரீ குழுவினர்** |
| முற்பகல் 11.35 மணி முதல்<br>பிற்பகல் 01.00 மணி வரை | **திருப்புகழ் மற்றும் வேல் மாறல் பாராயணம் முருகன் திருவருட் சங்கத்தினர்** |
| பிற்பகல் 01.00 மணி | **ஆறுமுக ஸஹஸ்ரநாம அர்ச்சனை பூர்த்தி தொடர்ந்து குமாரபோஜனம் அன்னதானம்** |
| மாலை 04.30 மணி முதல்<br>மாலை 06.00 மணி வரை | **வேதபாராயணம்** |
| மாலை 06.00 மணி முதல்<br>இரவு 07.30 மணி வரை | **முருகப்பெருமானுக்கு ஆறுவித மலர்களைக் கொண்டு ஸ்ரீஸுப்ரமண்ய த்ரிசதி அர்ச்சனை** |
| இரவு 08.00 மணி முதல்<br>இரவு 09.00 மணி வரை | **திருப்புகழ் இன்னிசை முருகன் திருவருட் சங்கத்தார்** |

---

உழலுகின்ற பொய்யனாகித் துன்பமுற்றுத் தளர்ந்து, நோயும் பழைய வினையும் இந்த உடம்பை மறைக்க, கலக்க மடையாத அறிவைத் தந்து, உனது திருவருளினால் அடியேனைக் காப்பாற்றுவீராக!

துக்கம் வெந்து விழ ஞானம் உண்டு குடில்
வச்சிரங்கள் என மேனி தங்க(ம்) உற
சுத்த (அ)கம் வேத விந்தையொடு புகழ்வேனோ
**(கட்டி முண்டக-சிதம்பரம் திருப்புகழ்)**

## 28.10.2025 செவ்வாய்க்கிழமை

| | |
|---|---|
| காலை 07.30 மணி முதல்<br>பிற்பகல் 02.00 மணி வரை | **ஸ்ரீ தேவசேனா வள்ளி கல்யாணம்**<br>**கீத காங்கேய காவ்யம் என்னும்**<br>**ஸ்ரீ ஸுப்ரஹ்மண்ய அஷ்டபதி**<br>**சிலவற்றுடன் திருப்புகழில்**<br>**ஸ்ரீ தேவசேனா வள்ளி கல்யாணம்**<br>நிகழ்த்துபவர்கள்<br>**ஸ்ரீ பாண்டுரங்க பஜனை மண்டலியினருடன்**<br>**முருகன் திருவருட் சங்கத்தினர்** |
| பிற்பகல் 03.30 மணி முதல்<br>மாலை 04.00 மணி வரை | **விழா நிறைவு இசை**<br>**முருகன் திருவருட் சங்கத்தினர்**<br>**101/50, பெரிய தெரு,**<br>**திருவல்லிக்கேணி, சென்னை 600 005** |




பிறவித் துன்பமானது வெந்து நீறாகி ஒழிய, ஞான அமிர்தப் பானம் செய்து, உடம்பு வச்சிரமயமாகி, பொன் மேனியாக விளங்க நிர்மலமான முத்தி வீடு அடியேனுக்கு எய்த வேத விசித்திரத்துடனே உமது திருப்புகழை எடுத்துப் பாடுவேனோ?

பத(ம்) துய்த்துக் கொடு தீமைய மாநர(கு)
அடைந்திட்டுச் சவம் (ஆ)கி விடாது (உ)ன்
பதம் பற்றிப் புகழானது கூறிட அருள்வாயே!
**(இணங்கி-சிதம்பரம் திருப்புகழ்)**

## தலைவர்

**ஸ்ரீ கணேசன் V.** அபிராமபுரம், சென்னை 600 018

## உபதலைவர்

**ஸ்ரீ வேங்கடராமன் V.** அரும்பாக்கம், சென்னை 600 106

## செயலர்

**ஸ்ரீ சந்த்ரசேகர் N.** மடிப்பாக்கம், சென்னை 600 091

## இணைச்செயலர்கள்

**ஸ்ரீ ஸ்ரீதர் S.** மயிலை, சென்னை 600 004

**ஸ்ரீ ஜானகிராமன் V.** நுங்கம்பாக்கம், சென்னை 600 034

## பொருளாளர்

**ஸ்ரீ நாராயணன் V.P.** மயிலை, சென்னை 600 004

## செயற்குழு உறுப்பினர்கள்

**ஸ்ரீ ஸுப்ரஹ்மண்யன் S.** தி.நகர், சென்னை 600 017

**ஸ்ரீ கணேஷ்ராமன் M.** வடபழநி, சென்னை 600 026

**ஸ்ரீ ஸ்ரீதரன் S.** மந்தைவெளி, சென்னை 600 028

**ஸ்ரீ மோகன் S.** ஆழ்வார்பேட்டை, சென்னை 600 018

---

இன்பத்தை அனுபவித்து கொடிய தீமை நிறைந்த பெரிய நரகத்தை அடைந்து, பிணமாகி விடாமல் உமது திருவடியைப் பற்றி, உமது திருப்புகழைப் பாட திருவருள் புரிவீராக!

**வெண்பா**

முருகன் திருவருட் சங்கத்தில் நெஞ்சம்
உருகிப் புகுவார் தமக்குப் பெருகுமே
அன்றே பெரும் பொருளும் ஆண்டவன் பேரருளும்
நன்றே நலம் பலவும் காண்.

- **அருட்கவிமணி காமாக்ஷிதாசர்**
ஸ்தாபகர்
**முருகன் திருவருட் சங்கம்**




முருகன் திருவார் அருட்சங்கம்
மூன்று தமிழ்போல் வாழி! என்றும்
பெருகன் புடையார் பலர் அதனைப்
பேணி வளர்ப்பர் உறுப்பினராய்

மருகன் மாற்கும் திருமாற்கும்
வாழ்த்த வாழ்வார் வாழவைப்போர்
பொருகந் தஷஷ்டிப் பெருவிழாவும்
பொலிக! வாழ்க! வளர்க நன்றே


- அருட்கவி தவத்திரு **ஸாதுராம் ஸ்வாமிகள்**

**வாழ்க முருகன் திருவருட் சங்கம்**
**(72 ஆண்டுகளாக இறைவன் தொண்டில்)**

திருப்புகழை (உ)ரைப்பவர்கள் படிப்பவர்கள் மிடிப்பகைமை

செயித்(து) (அ)ருளும் (இ)சைப்பிரிய

திருத்த மாதவர் புகழ் குருநாதா



திருப்புகழை எடுத்து கூறி உரை கூறுவோருக்கும், ஓதுகின்றவர்களுக்கும், உள்ள வறுமைகளையும், பகைமைகளையும் களைந்து அருள்புரிகின்ற இசையை விரும்புபவரே! திருந்திய ஒழுக்கமுள்ள சிறந்த தவத்தினர்கள் புகழ்கின்ற குருநாதரே!